8th November 1965]

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) & (இ) செஞ்சியில் சுற்றுலா மாளிகை ஒன்று கட்டவும், செஞ்சிக்குச் செல்லும் சாலைகளில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளவும் ஸ்ரீ கே. கோபால கவுண்டர், எம்.எல்.ஏ., அவர்களிடமிருந்து அரசாங்கத்துக்கு கோரிக்கைகள் வந்தன.

செஞ்சியில் சுற்றுலா மாளிகை கட்டும் விஷயம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. செஞ்சிக்குச் செல்லும் சாலைகளில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளும் விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, சுற்றுலா மாளிகைகளில் தங்குவதற்கு சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஏதேனும் தனிச் சலுகை அளிக்கப்படுகிறதா?

கனம் திரு. கோ. பூவராகன் : சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு தனிச் சலுகை இல்லை.

திரு. எ. கோ பாலகிருஷ்ணன் : செஞ்சியில் சுற்றுலா மாளிகை இப்பொழுது கட்டுவதற்கில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஆனால், வேறு எங்காவது கட்ட உத்தேசம் உண்டா ?

கனம் திரு. கோ. பூவராகன் : வேறு ஒன்று சிதம்பரத்தில் கட்ட உத்தேசம் இருக்கிறது. தேசிய நெருக்கடி காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. வை. சங்கரன் : சுற்றுலா மாளிகை தவிர, இன்ஸ்பெக்ஷன் பங்களாக்களில் சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு எல்லாம் கட்டணச் சலுகை, முதலிடச் சலுகை இருக்கிறது. ஆனால், சட்டசபை மெம்பர்கள் பொது மக்களோடு சேர்த்துக் கருதப்படும் குறைபாடு இருக்கிறதே, அதைப் போக்க அரசாங்கம் முன்வருமா? ப்ரையாரிடி, கட்டணச் சலுகை முதலியவை சட்ட சபை மெம்பர்களுக்கும் வழங்கப்படுமா?

கனம் திரு. கோ. பூவராகன் : இன்ஸ்பெக்ஷன் பங்களாவைப் பற்றிய விவரத்திற்குத் தனிக் கேள்வி போட வேண்டும்.

Paramakudi Municipality

* 358 *Q.*—Sri C. SRINIVASAN : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether it is a fact that the Paramakudi Municipality had requestioned during 1964 the services of a Supervisor; and

(*b*) if so, the action taken thereon ?

The Hon. G. BHUVARAHAN : (*a*) Yes, Sir.

(*b*) Sanction was accorded for appointing a Supervisor for one year.